**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 64/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **நாகஜோதி** | Caste | : | |
| Father/Husband Name | : | **செல்வம்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.04.2025**

**முதல் விசாரணை**

நான் ஜோதில்நாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 25.10.2019 ஆம் தேதியில் மாலை 03.30 மணியளவில் நானும், எங்கள் மகள் சர்மிளா, ஜனுஜா மற்றும் எங்கள் பக்கத்துவீட்டை சேர்ந்தவர்கள் காசியம்மாள், முத்துலெட்சுமி மற்றும் ஆக மொத்தம் 13 நபர்கள் சென்றுகொண்டிருந்தபோது காரயம்பட்டி விளக்கு அருகே லாரி மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு தலை மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டது. எனது மகள்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. எனது மகள் ஜனுஜா, வயது 7, மேற்படி விபத்தில் இறந்துவிட்டார். எங்களை உசிலம்பட்டி அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக சேர்தார்கள். பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். விபத்தில் சம்பவ இடத்திலேயே 6 நபர்கள் இறந்துவிட்டார்கள். எனது மகள்

மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆட்டோவில் பயணம் செய்த நபர்களின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாகன விபத்து சம்பந்தமாக இழப்பிடு நீதிமன்றத்தில் பெற்றுவிட்டோம் என்றால் சரிதான். வாகன விபத்து யாரால் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 64/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அய்யர்** | Caste | : | |
| Father/Husband Name | : | **மணிகட்டிசேர்வை** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.04.2025**

**முதல் விசாரணை**

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 25.10.2019 ஆம் தேதியில் மாலை 03.30 மணியளவில் நானும், வினோத்குமார், அசோக் மற்றும் மொத்தம் 13 நபர்கள் ஷேர் ஆட்டோவில் கோடாங்கிநாயக்கப்பட்டியிலிருந்து உசிலம்பட்டிக்கு சென்றுகொண்டிருந்தபோது, கரையாம்பட்டி விளக்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது, விபத்து ஏற்பட்டது. நான் மயக்கம் அடைந்துவிட்டேன். உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்காக சேர்த்தார்கள். மறுநாள்தான் எங்கள் ஆட்டோவின் மீது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அதில் 6 நபர்கள் இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். எனக்கு பின்கலுத்திலும் இடது கையிலும் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. வாகன விபத்தில் ஏற்பட்ட ஆட்டோவில் பயணம் செய்த நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தது யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 புகார்தாரர் பிரவீன்குமார் இன்று நீதிமன்றத்தில் வைத்துதான் தெரியும் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆட்டோ உரிமையாளர் வினோத் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றாலும், உறவினர் என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 64/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **வினோத்** | Caste | : | |
| Father/Husband Name | : | **ரவி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.04.2025**

**முதல் விசாரணை**

நான் கோடாங்கிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் மாதம் தெரியவில்லை 25 ஆம் தேதியில் நானும், அ.சா.1ம் மற்றும் மொத்தம் 13 நபர்கள் எனக்கு சொந்தமான ஷேர் ஆட்டோ TN 58 W 8014 கோடாங்கிநாயக்கப்பட்டியிலிருந்து உசிலம்பட்டிக்கு சென்றுகொண்டிருந்தோம். காராம்பட்டி விளக்கு அருகே சென்றுகொண்டிருந்தபோது, எதிரே உசிலம்பட்டியிலிருந்து வீரபாண்டி என்பவர் ஓட்டி வந்த லாரி எங்கள் ஆட்டோவின் மீது மோதியதில் ஆட்டோவில் பயணம் செய்த பலருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் மேற்படி வீரபாண்டி ஆவார். மேற்படி விபத்தில் எனக்கு இடது கையிலும், வலது காலிலும் அடிப்பட்டது. பின்னர் நான் ஆட்டோவில்

உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். விபத்தில் 6 நபர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். அரசு மருத்துவமனையில் ஒரு நபர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் நான் பயணம் செய்த ஆட்டோவின் பதிவு சான்றிதழ் என்னுடைய பெயரில் உள்ளது. மேற்படி ஆட்டோவை இன்னொரு நபர் ஏன் ஓட்டினார் என்றால் அவர்தான் ஓட்டோவின் ஓட்டுநர் ஆவார். சம்பவம் நடந்த சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. ஆட்டோவை ஓட்டி வந்த அசோக் என்பவருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனது வாகனத்திற்கு இன்சுரன்ஸ் இருந்ததா என்றால் தெரியாது. விபத்தில் யார் யாருக்கு எந்த எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் வாகனத்தை நான்தான் ஓட்டி சென்றேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தபோது ஆட்டோவில் யார் யார் பயணம் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. யார் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்திருந்தால் நான் முதல் மற்றும் குறுக்கு விசாரணையில் சொன்னதுபோல்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரிதான். என்னுடைய ஆட்டோவினால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், வழக்கிலிருந்து

தப்பிபப்தற்காக எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 64/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **பிரவீன்குமார்** | Caste | : |
| Father/Husband Name | : | **சின்னராசு** | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.04.2025**

**முதல் விசாரணை**

நான் ஜோதில்நாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். நான் AC மெக்கானிக்காக இருந்து வருகிறேன். கடந்த 25.10.2019 ஆம் தேதியில் மாலை 03.00 மணியளவில் நானும், என்னுடன் 13 நபர்கள் ஷேர் ஆட்டோவில் எழுமலையிலிருந்து உசிலம்பட்டி சென்றுகொண்டிருந்தோம். காராம்பட்டி வளைவு பகுதியில் எதிரே வந்த லாரி நாங்கள் சென்ற ஷேர் ஆட்டோவின் மீது மோதியது. அதில் ஆட்டோவில் பயணம் செய்த எனக்கு வலது தோளிலும், பின்தலையிலும் காயம் ஏற்பட்டது. எனது அம்மா வாசியம்மாளுக்கு தலையிலும், காலிலும், மூக்கிலும் காயம் ஏற்பட்டது மற்றும் எங்கள் பக்கத்து வீட்டுகாரர்களான நாகஜோதி, அவர்களின் மகள் ஜனுஜா, சர்மிளா, முத்துலெட்சுமி மற்றும் சிலருக்கு காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டபோது நாங்கள் மயக்க நிலையில் இருந்தோம். எங்களை

சிகிச்சைக்காக உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். எனது அம்மா விபத்தில் இறந்துவிட்டார். விபத்தில் மொத்தம் 7 நபர்கள் இறந்துவிட்டார்கள். இது சம்பந்தமாக நான் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது என்றால் லாரி டிரைவரின் தவறால் ஏற்பட்டது. லாரி ஓட்டுநரின் பெயர், அடையாளம் தெரியாது என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டுநருக்கு பின்னால் அமர்ந்திருந்தேன். விபத்து நடந்த சாலையில் சென்டிரல் மீடியன் இருந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்தவுடன் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எங்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தார்கள். யார் சேர்த்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு சென்றவுடன் எனக்கு சுயநினைவு வந்துவிட்டது. விபத்து நடந்த நேரத்தில் யார் யார் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு தெரியாது. போலீசார் நான் சொல்ல சொல்ல புகார் வாக்குமூலத்தை எழுதினார்கள். அதில் என்ன எழுதியுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். ஆட்டோவின் உரிமையாளரின் பெயர் வினோத். போலீசார் சொல்லிதான் இந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். லாரியின் பதிவு எண் தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையின்போது மேற்படி விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் காயம் அடைந்ததற்கும், இறந்துபோன எனது

அம்மாவிற்காகவும் நீதிமன்றத்தில் இழப்பீடு பெற்றுவிட்டோம். என்னுடன் ஷேர் ஆட்டோவில் வந்தவர்கள் அனைவரின் ஊர் பெயர்கள் எனக்கு தெரியாது என்றால் சில நபர்களின் ஊர் பெயர்கள் தெரியும். சில நபர்களின் ஊர் பெயர் தெரியாது. நாங்கள் பயணம் செய்த ஆட்டோவின் ஓட்டுநர் குடிபோதையில் ஆட்டோவை ஓட்டினார் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றபிறகு மறுவிசாரணை எதுவும் செய்யவில்லை. புகார் வாக்குமூலம் விபத்து நடந்த அன்று கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பயணம் செய்த ஷேர் ஆட்டோவின் ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.